**செய்தி வெளியீடு எண்: 494** **நாள் : 08.10.2014**

**பத்திரிக்கைச் செய்தி**

குடும்ப அட்டையில் மாற்றங்கள் செய்தல் மற்றும் பொது விநியோக திட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் குறித்து தமிழகம் முழுவதும் வட்டங்கள் தோறும் மக்கள் குறைதீர் கூட்ட முகாம் ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும் என அரசு அறிவித்துள்ளது. அதன்படி உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சென்னையில் 16 மண்டல பகுதிகளில் மக்களின் குறைகளை கேட்டு தீர்வு காணும் பொருட்டு இணைப்பில் குறிப்பிட்டுள்ள மையங்களில் அக்டோபர் 2014 மாதத்திற்கான மாதாந்திர பொது விநியோகத் திட்ட குறைதீர் கூட்ட முகாம் 11.10.2014 அன்று காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் பொது விநியோக திட்டத்தைச் செயல்படுத்தும் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, கூட்டுறவு துறை மற்றும் தமிழ் நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொள்ளவிருக்கின்றனர். அப்பகுதியை சுற்றி உள்ள குடும்ப அட்டைதாரர்கள் குடும்ப அட்டைகளில் பெயர், முகவரி மாற்றம், திருத்தம் மற்றும் பொது விநியோக திட்ட கடைகளின் செயல்பாடுகள் குறித்தும் பொது விநியோக திட்ட பொருள்கள் கிடைப்பது குறித்தும் தனியார் துறையில் சந்தையில் விற்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகள் வாங்கும் நுகர்வோர்கள் ஏமாற்றப்படுவது அல்லது குறைகள் இருப்பது குறித்தும் தங்களுக்கு குறைகள் ஏதேனும் இருப்பின் அவற்றை இக்கூட்டத்தில் தெரிவித்தால் குறைகளை விரைந்து தீர்வு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். சென்னையில் உள்ள 16 மண்டல பகுதியில் உள்ள குடும்ப அட்டைதாரர்கள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| வ.எண் | மண்டலம் | கூட்டம் நடைபெறும் இடங்களின் பெயர் |
|---|---|---|
| 1 | சிதம்பரனார் | சென்னை நடுநிலைப்பள்ளி, 130, அம்மன் கோவில் தெரு, கொண்டித்தோப்பு, வால்டாக்ஸ் ரோடு, சென்னை 600 079. |
| 2 | இராயபுரம் | O.L.K.சென்னை மாநகராட்சி தொடக்க பள்ளி, மீனாம்பாள்நகர், கொருக்குபேட்டை, சென்னை 600 021 |
| 3 | பெரம்பூர் | சென்னை உயர்நிலைப்பள்ளி, 3, சுந்தரம் மெயின் தெரு, கணேசபுரம், வியாசர்பாடி, சென்னை/39 (ஜீவா ரயில் நிலையம் எதிரில்) |
| 4 | அண்ணாநகர் | சென்னை துவக்கபள்ளி, 3, சுப்புராயன் 1வது தெரு, நம்மாழ்வார் பேட்டை, சென்னை 12. (மார்க்கெட் அருகில்) |
| 5 | அம்பத்தூர் | டிவைன் பிரைமரி மற்றும் நர்சரி பள்ளி, 53, பாரதிநகர் 2வது குறுக்கு தெரு, அம்பத்துார், சென்னை 600 053. (பாரதி நகர் பூங்கா அருகில் மற்றும் புதுார் பேருந்து நிலையம் அருகில்) |
| 6 | வில்லிவாக்கம் | சென்னை மாநகராட்சி அலுவலகம் (ரவுண்ட் பில்டிங்) 1, ஐயப்பா நகர் முதல் மெயின் ரோடு, விருகம்பாக்கம், சென்னை 92. |
| 7 | திருவொற்றியூர் | ஸ்ரீ குருமூர்த்தி வித்யாலயா உயர்நிலைப்பள்ளி, பாடசாலை தெரு, ஆர்.வி.நகர், கொடுங்கையூர், சென்னை 600 118. |
| 8 | ஆவடி | டி.என்.எஸ்.எல் மழலையர் பள்ளி, 26வது மெயின் ரோடு, ராஜீவ் காந்தி நகர், சென்னை 62. (CRPF Camp அருகில்) |
| 9 | தி.நகர் | சென்னை உயர்நிலைப்பள்ளி, 67, ரங்கராஜபுரம் மெயின் ரோடு, கோடம்பாக்கம், சென்னை–600 024. (ரங்கராஜபுரம் தபால் தந்தி நிலையம் அருகில்) |

| | | |
|---|---|---|
| 10 | மயிலாப்பூர் | சமுதாயநலக்கூடம், சீனிவாசபுரம் மெயின் ரோடு, சீனிவாசபுரம், பட்டினம்பாக்கம், சென்னை–600 028. (பட்டினம்பாக்கம் பேருந்துநிலையம் அருகில்) |
| 11 | பரங்கிமலை | இந்து சமுதாயக்கூடம் 2, 8வது தெரு, இந்து காலனி, நங்கநல்லூர், சென்னை–600 061. (செல்லம்மாள் பள்ளி எதிரில்) |
| 12 | தாம்பரம் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, பொழிச்சலூர் மெயின் ரோடு, பொழிச்சலூர், சென்னை – 600 074. (பொழிச்சலூர் ஊராட்சி மன்றம் அருகில்) |
| 13 | சைதாப்பேட்டை | சென்னை நடுநிலைப்பள்ளி, 21, பெருமாள் கோவில் தெரு, மேட்டுப்பாளையம், சென்னை– 600 033. (பெருமாள் கோவில் அருகில்) |
| 14 | ஆயிரம்விளக்கு | சென்னை நடுநிலைப்பள்ளி, ராமா தெரு, நுங்கம்பாக்கம், சென்னை–600 034. (நுங்கம்பாக்கம் காவல் நிலையம் அருகில்) |
| 15 | சேப்பாக்கம் | சென்னை மாநகராட்சி பகுதி அலுவலகம், 2, பெசன்ட் ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை– 600 005. (விவேகானந்தர் இல்லம் பேருந்துநிலையம் அருகில்) |
| 16 | சோழங்கநல்லூர் | சென்னை மாநகராட்சி 193வது வார்டு அலுவலகம், பழைய மகாபலிபுரம் ரோடு, துரைப்பாக்கம், சென்னை –600 096. (துரைப்பாக்கம் சிக்னல் அருகில்) |

ஆணையாளருக்காக

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**